உ

குகமயம்

ஸ்ரீகதிர்காமத் திருப்புகழ்

இவை

ஸ்வாமி பாலானந்த ஸரஸ்வதி

அவர்களால்

தொகுக்கப்பெற்று

சென்னை திருவல்லிக்கேணி கிரி பிரஸ்ஸில்

பதிப்பிக்கப்பட்டது.

1939.

உ

குகமயம்.

முகவுரை

1. மஹா தவசிரேஷ்டர்களும், முனிபுங்கவர்களும் திரேதாயுக முடிவில் ஒன்று கூடி இனிவரப்போகும் கலியுகத்தை நாம் எப்படி ஜயிப்பது என்று ஏங்கினார்கள். அவருள் சிலர் கலியுகத்தில் மும்மலம் அறுப்பதற்குச் சாதன வழியாவது ஸ்கந்தனது பெருமையைப்பற்றிப் பேசலே சிறந்ததாமெனக்கூறி ஏங்கின பலரைத் தேற்றினர். ஆதலால், மும்மலவயப்பட்டுப் பிறவிக்கடலில் விழுந்து போக்கு வரவு புரிகின்ற ஆன்மகோடிகளாகிய யாமும் இப்பாப யுகத்தில் உஜ்ஜீவிக்க வேண்டுமானால் ஸ்கந்தமகிமையைப் பேசிக்கொண்டிருக்க வேண்டுமென்பதுதான் தீர்ந்த முடிவு.

2. "ஈசனே யவனுடலால் மதலை யாயினான்" என்றபடி சங்கரனே சண்முகனாகவந்து சூரபத்மன் முதலிய அசுரர்களைத் தொலைத்து இந்திராதிகளாகிய தேவர்களை யனுக்கிரகித்துத் தன்னிடமிருந்து பிரிந்து நின்ற இச்சை, கிரியை என்னும் இருசக்திகளாகிய வள்ளி தேவசேனைகளை விவாகஞ் செய்துகொண்டு கந்த கிரியில், "பெண்ணொருபாகங் கொண்ட பிஞ்ஞகன் வதன மொன்றில், கண்ணொரு மூன்று வைகுங் காட்சி போல்" இருதேவியர் சகிதமாக அடியார்களுக்கு அனுக்கிரகஞ் செய்யும் நிமித்தம் அன்றும் இன்றும் என்றும் எழுந்தருளியிருக்கிறான் என்பது கந்தபுராணம். இகாபீஷ்டவரதனான முருகன் கந்த கிரியில் மட்டுமன்றி எல்லாக் குன்றுகளிலும், பழங்கள் முதிர்ந்துள்ள சோலைகளிலும் பொதுவாகவும், திருப்பரங்குன்றம், திருவேரகம், திருவாவினன்குடி, திருச்செந்தில் என்ற படை வீடுகளில் சிறப்பாகவும் எழுந்தருளியிருக்கின்றான் என்றும் ஆன்றோர் கூறுவர்.

3. இத்தலங்களில் மட்டுமா? குமரன் எழுந்தருளியுள்ள பல தலங்கள் இன்னு முண்டு. அவற்றுள் முதலாவதாக எண்ணப்படுவது நம் இந்தியாவின் தெற்கிலிருக்கும் இலங்கையிலுள்ள "கதிர்காமம்" என்பதாம். இத்தலத்

தைப்பற்றிப் பலர் தற்காலத்தில் பலவிதமாகப் பேசிக்கொள் வதைப்பார்த்து இத்தலத்தின் உண்மைச் சரிதத்தை புலகத் தார்க்கு எடுத்துரைத்தல் கடமை எனக்கருதி சிற்சில குறிப்பு களை வெளியிடலாயினேன்.

4. இதனோடு நில்லாமல், ஆறுமுகப்பண்ணவன்றன் இன்னருள் பெற்றிலங்கிய அருணகிரிநாதர் அமுதவாக்காகிய திருப்புகழ் 16000-த்துள் இப்போது நமக்குக் கிடைத்திருக் கும் 1300 திருப்புகழ்களுள் கதிர்காமத்தைப்பற்றி எழுந்த பாடல் பதின்மூன்று. அவற்றை இச்சிறு புத்தகத்தில் சேர்த்துள்ளேன். அன்பர்கள் இத்திருப்பாட்டுக்களைத் தினந்தோறும் பக்தி சிரத்தையோடு, "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார்" களையானால் எல்லாம் வல்ல இறைவன் சண்முகன்தன் திருவருளுக்குப் பாத்திரராவார்கள் என்பது திண்ணம்.

5. சண்முகப்பெருமான் திருச்செந்திலில் தங்கி யிருந்து வீரவாகுதேவரைத் தூதாக வீரமகேந்திரபட்டினத் துக்கனுப்பிச் சூரன்கருத்தைத் யறிந்து வந்த பின்னர் யுத்த சன்னத்தராக தெற்கு நோக்கி யுத்தகத்திற்குச் செல்லு வாராயினர். அப்போது தேவர்கள் சுவாமியைப் பார்த்துப் பின் வருமாறு தெரிவிக்கலாயினர்;

"காண்டி யீது சூரனூர் கடுங்கணீசர் செறிதலால்
ஆண்டு சேறன் முறையதன் றதற்கடுத்த வெல்லைபாம்
ஈண்டு பாசறைத்தல மியற்று வித்திருந்தபின்
வேண்டு மாறு புரிதி யைய வினைய நாடி யென்னவே"

உடனே முருகன் தேவதச்சனைப்பார்த்து ஒரு பாச றையை நியமிக்கக் கட்டளையிட்டார். அதே க்ஷணத்தில் அவனும் ஒரு நகரத்தை நிர்மாணித்து அதற்கு ஏமகூடம் என்ற பெயரையும் ஸ்தாபித்தான்.

"மாட கூட மண்டபம் வளங்கொள் சோலை வாவிகள்
பீடு லாய கோபுரம் பிறங்கு வீதி யோர்திசை
கோடி கோடி யாக்கிமற் றோர் கோநகரியற்றியே
நாடு மேம கூட மென்று நாம மொன்று நாட்டினன்."

6. ஏமகூடம் என்னும் இத்தலத்தைத்தான் தற்காலம் பெரியார்கள் கதிர்காமம் என வழங்கி வருகின்றனர். இத்தலம் இலங்கைத்தீவில் கொழும்புக்கு நேர் தெற்கில் மாணிக்க கங்கை என்னும் ஓர் திவ்யநதிக்கரையில் உள்ளது. இதற்கும் தெற்கே இருந்து கடலால் கொள்ளப்பட்ட லெமூரியா என்னும் கண்டமதான் வீரமகேந்திர பட்டினமாக விருக்கவேண்டுமென்று யூகிக்கவேண்டியிருக்கிறது. இத்தலம் எல்லாப் பக்கங்களிலும் அடர்ந்த காடுகளால் சூழப்பட்டு என்றும் இயற்கை யழகையே காட்டிக்கொண்டிருக்கிறது. இவ்வியற்கை யழகைத்தான் முருகன் என்று ஒருசாரார் கூறுவர். இங்குப் பல பெரியார்கள் இன்னும் தனியேயிருந்து தவஞ்செய்து வருகின்றனர். இத்தலத்திற்கு யாத்திரை செய்துவிட்டுத் திரும்புகின்றவர்கள் ஓர் புது உணர்ச்சியுடன் தான் திரும்பிவருகிறார்கள் என்பது துணிபு. இங்கு முருகப்பெருமான் தக்ஷிணம் நோக்கி யுத்த கோலத்தோடு சகல ஆயுதங்களையுந் தாங்கிக் "கறுவு கொள் நெஞ்சமொடு" சூரன் நகரைப் பார்த்தவண்ணமா யிருப்பதால் நம்மைப் போன்ற ஆன்மகோடிகள் மீது அவர் கோபப் பார்வைபடக்கூடாது என்ற கருத்துப் பற்றி நமக்கு முன்னிருந்த பெரியார்கள் நம்மீது கருணை கூர்ந்து இவ்வாலயத்தின் நான்கு பக்கங்களிலும் சுவர்வைத்து மூடி யுள்ளார்கள். இது இப்போதும் இப்படித்தானிருக்கிறது. இதுதான் பிரதானகோயில். வள்ளி நாயகியார் கோயில் வடக்குப் பார்த்த சந்நிதி. தெய்வயானை யம்மையார் கோயில் மேற்குப்பார்த்த சந்நிதி. இக்கோயிலை வழிபட யாத்திரையாக வரும் அன்பர்களுக்குப் பல உதவிபுரிந்து வந்து பிறகு முருகனடி யடைந்த முத்துலிங்கசாமி கோயில் கிழக்குப் பார்த்த வண்ணமாக அமைந்துள்ளது. இந்த நான்கு கோயில்களின் அமைப்பு ஸ்வஸ்திகா என்று சொல்லும்  இவ்வண்ண மமைந்துள்ளது.

7. கதிர்காமத்திலுள்ள கோயில்களை நான்கு பெரிய பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவற்றுள் முதற்பிரிவு (அ) சுவாமி கோயிலும் அதைச்சுற்றியுள்ள சிறு கோயில்களும்; (ஆ) வள்

ளியம்மன் கோயில் ; (இ) பத்தினி அல்லது கண்ணகி (கற்புக் குத் தலைவி) கோயில்.

(ii) இரண்டாம்பிரிவு. (அ) தெய்வயானையம்மன் கோவில்; (ஆ) மாணிக்கப் பிள்ளையார் கோயில்; (இ) காசியிலிருந்து முருகப்பெருமானைத் தேடிவர தெய்வயானை யம்மையாரால் அனுப்பப்பெற்ற முத்துலிங்கசாமி கோயில்; (ஈ) கதிரைமலை; (உ) செல்வக்கதிர்காமம் அல்லது விநாயகர் எழுந்தருளியுள்ள ப்ராண கதிர்காமம்.

(iii) மூன்றும் பிரிவு: (அ) ப்ரதான கோயிலிலிருந்து ½ மைலிலுள்ள அசுரமலையின் மீதுள்ள கிரி விஹாரா! (ஆ) பெருமாள் கோயில்.

(iv) நான்காம் பிரிவு; மகம்மதிய மசூதி.

8. இத்தலத்தில் நான்கு வருஷாந்தர உற்சவங்கள் நடைபெறுகின்றன.

(1) அவரூடு மங்கலிய— புத்தர்கள் புதுவருஷம் (தமிழர்கள் புதுவருஷமும் அதுவே)

(2) கபிஸ்தவான மங்கலிய—வள்ளியம்மன் விவாகம் ஒரு இரவு உற்சவம்; வைகாசி மாதத்தில் நடைபெறும்.

(3) ஈசாலபெரோரா—ஜூலைமாத உற்சவம். இது 16 நாள் உற்சவம். ஆடிமாதம் அமாவாசியைக் கடுத்த பிரதமை முதல் பௌர்ணமி வரை நடைபெறும். பௌர்ணமியன்று தீர்த்தம். கடைசி 4, 5, உற்சவங்களுக்கு ஏராள மான பக்தர்கள் வருகிறார்கள். இந் நாட்களில் கற்பூர தீபங்கள் அதிகம்.

(4) இல் மஹாசச்சி அல்லது கார்த்திகை மங்கலிய- இது நவம்பர் மாதத்தில் நடைபெறுகிறது. இச்சமயம் ஷை ஸ்தலத்தில் கணக்கில்லாத கற்பூரத்தீபங்கள் ஏற்றப்படுகின்றன. இது முருகன் சூரனை ஜயித்த கொண்டாட்ட உற்சவமென்கிறார்கள்.

9. இத்தலத்துள்ள கோயில்கள் கி. மு. 160 வருஷத்தில் கட்டப்பெற்றன என்று ஆராய்ச்சிக்காரர்கள் முடிவுகட்டியிருக்கிறார்கள். இத்தலத்திற்குச் செல்லும் சரியான வழி பின்வருமாறு:—

சென்னையிலிருந்து புறப்படும் தனுஷ்கோடி தென்னி ந்தியா இருப்புப்பாதைவழியாக பாசஞ்சர் அல்லது சிலோன் மெயில் மூலமாக தனுஷ்கோடிக்கு 3 ஸ்டேஷன்கள் முன் னுள்ள மண்டபம் (Camp) ஸ்டேஷனிலிறங்கிச் சிலோன் செல்வதற்கு பாஸ்போர்ட்டு பெற்றுக்கொண்டு மீண்டும் ரயிலேறி தனுஷ்கோடியிலிறங்கிக் கப்பலேறி இலங்கையைச் சேர்ந்த தலைமன்னாரிலிறங்கி பிறகு அங்கிருந்து சிலோன் கவர்ன்மெண்டு ரெயில்வே மூலமாகக் கொழும்புக்குச் சென்று அதிலிருந்து மாத்தரை என்னும் ஊர்வரை 99 மைல் ரயில் பிரயாணஞ் செய்ய வேண்டியது. அதிலிருந்து மோட்டார் பஸ் மூலமாக 72 மைல் தூரத்திலுள்ள திசைமாரா என்கிற ஊரை அடைந்து அதிலிருந்து 12 மைல் தூரம் கால் நடையாகச் சென்றால் கதிர்காமத்தை யடையலாம். இந்த தூரத்திற்கு மாட்டு வண்டிகளும் கிடைக்கும். ஆனால் வழி சரியானதாக இல்லாததால் நடந்து செல்வது தான் மேலானது. யாத்திரை வாசிகள் போஜன சௌகர்யங்களை அவர் அவர்களே வசதி செய்து கொள்ளவேண்டியது. ஆசாரமான உணவு சாலைகள் வழிகளிலில்லை. சாமான்கள் மட்டும் எங்கும் கிடைக்கும். யாத்திரை வாசிகள் வாங்கிச் சமையல் செய்து கொள்ளலாம். சென்னையிலிருந்து நேராகக் கதிர் காமம் போகவரச் சுமார் ரூபாய் 50-0-0 (ரயில், கப்பல், பஸ்கட்டணம் மட்டும்) ஆகும். படிச் செலவு தனியே சுமார் ரூ. 25 ஆகும்.

10. இன்னுமொரு விரிவான பதிப்பு முருகன் திருவருளால் விரைவில் வெளிவரும்.

11. இவ்வரிய புத்தகத்தை வெளியிட ஊக்கிய திரு. க. சோமசுந்தரஞ் செட்டியார் அவர்கட்கும், இதைப் பலரும் ஓதி உய்ய வேண்டுமென்ற நல்லெண்ணத்துடன் இலவசமாகப் பதிப்பித்துத்தந்த கிரி அச்சுக்கூடத் தலைவர் திரு. கைலாஸ ஐயர் அவர்கட்கும் முருகன் திருவருள் என்றும் பெருகுக.

சென்னை
12-5-1939. } ஸ்வாமி பாலானந்த சரஸ்வதி.

திருப்புகழ்

கதிர்காமம்

1

திருமக ளுலாவு மிருபுய முராரி
திருமருக நாமப் பெருமாள்காண்
ஜெகதலமும் வானு மிகுதிபெறு பாடல்
தெரிதரு குமாரப் பெருமாள்காண்
மருவுமடி யார்கள் மனதில்விளை யாடு
மரகதம யூரப் பெருமாள்காண்
மணிதரளம் வீசி யணியருவி சூழ
மருவு கதிர்காமப் பெருமாள்காண்
அருவரைகள் நீறு படஅசுரர் மாள
அமர் பொருதவீரப் பெருமாள்காண்
அரவுபிறை வாரி விரவுசடை வேணி
அமலர் குருநாதப் பெருமாள்காண்
இருவினையிலாத தருவினை விடாத
இமையவர் குலேசப் பெருமாள்காண்
இலகுசிலை வேடர் கொடியி னதிபார
இருதனவி நோதப் பெருமாளே.

2

அலகின் மாறு மாறுத கலதி பூத வேதாளி
அடைவில் ஞாளி கோமாளி அறமீயா
அழிவு சோளி நாணுது புழுகு பூசி வாழ் மாதர்
அருளி லாத தோடோய மருளாகிப்
பலக லாக ராமேரு மலைக ராச லாவீசு
பருவ மேக மேதாரு வெனயாதும்
பரிவு றுத மாபாதர் வரிசை பாடி யோயாத
பரிசில் தேடி மாயாத படியாராய்
இலகு வேலை நீள்வாடை யெரிகொள் வேலை மாசூரி
லெறியும் வேலைமாறுத திறல்வீரா
இமய மாது பாகீர திநதி பால காசார
விறைவி கான மால்வேடர் சுதைபாகா
கலக வாரி போல்மோதி வடவை யாறு சூழ்சீத
கதிர காம மூதூரி லிலையோனே
கனக நாடு வீடாய கடவுள் யானை வாழ்வான
கருணை மேரு வேதேவர் பெருமாளே.

3

உடுக்கத் துகில்வேணு நீள்பசி
யவிக்கக் கனபானம் வேணுநல்
ஒளிக்குப் புனலாடை வேணுமெய் யுறுநோயை
ஒழிக்கப் பரிகாரம் வேணுமுள்
இருக்கச் சிறுநாரி வேணுமொர்
படுக்கத் தனிவீடு வேணுமிவ் வகையாவுங்

கிடைத்துக் க்ருஹவாசி யாகிய
மயக்கக் கடலாடி நீடிய
இளைக்குப் பாரிபால னுயுபி ரவமேபோம்
க்ருபைச்சித் தமுஞான போதமு
மழைத்துத் தரவேணு மூழ்பவ
கிரிக்குட் சுழல்வேனை யாளுவ தொருநாளே
குடக்குச் சிலதூதர் தேடுக
வடக்குச் சிலதூதர் நாடுக
குணக்குச் சிலதூதர் தேடுக எனமேவிக்
குறிப்பிற் குறிகாணு மாருதி
யினித்தெற் கொருதூது போவது
குறிப்பிற் குறிபோன போதிலும் வரலாமோ
அடிக்குத் திடகார ராகிய
வரக்கர்க் கிளையாத தீரனு
மலைக்கப் புறமேவி மாதுறு வனமேசென்று
அருட்பொற் றிருவாழி மோதிர
மளித்துற் றவர்மேல் மனோகர
மளித்துக் கதிர்காம மேவிய பெருமாளே!

4

எதிரிலாத பக்தி தனைமேவி
இனியதா ணினைப்பை யிருபோதும்;
இதயவாரி திக்கு ளுறவாகி
எனதுளே சிறக்க அருள்வாயே!
கதிரகாம வெற்பி லுறைவோனே
கனகமேரு வொத்த புயவீரா;
மதுரவாணி யுற்ற கழலோனே
வழுதிகூ னிமிர்த்த பெருமாளே!

5

கடகட கருவிகள் தபவகி ரதிர்கதிர்
காமத் தரங்க மலைவீரா
கனகத நகருலி புணரித குணகுக
காமத் தனஞ்சம் புயனோடே
வடசிக ரகிரித விடுபட நடமிடு
மாவிற் புகுங்கந் தவழாது
வழிவழி தமரென வழிபடு கிலனென
வாவிக் கினம்பொன் றிடுமோதான்
அடவியி ருடியபி நவகும ரியடிமை
யாயப் புனஞ்சென் றயர்வோனே
அயிலவ சமுடன தகிதிரி தருகவி
யாளப் புயங்கொண் டருள்வோனே
இடமொரு மரகத மயில்மிசை வடிவுள
ஏழைக் கிடங்கண் டவர்வாழ்வே
இதமொழி பகரினு மதமொழி பகரினும்
ஏழைக் கிரங்கும் பெருமாளே!

6

சமரமுக வேலொத்த விழிபுரள வாரிட்ட
தனமசைய வீதிக்குள் மயில்போ லுலாவியே
சரியைக்ரியை யோகத்தின் வழிவருக்கு பாசுத்தர்
தமையுணர ராகத்தின் வசமாக மேவியே
உமதடியு ளுருக்கு மனுமரண மாயைக்கு
முரியவர் மகாதத்தை யெனுமாய மாதரார்

ஒளிரமணி பீடத்திலமடுபடு வேனுக்கும்
உனதருள் க்ருபா சித்தம் அருள்கூரவேணுமே
இமகிரிகு மாரத்தி அநுபவப ராசத்தி
எழுதரிய காயத்ரி யுமையாள்கு மாரனே
எயினர்மட மானுக்கு மடலெழுதி மோகித்து
இதணருகு சேவிக்கு முருகாவி சாகனே
அமரர்சிறை மீள்விக்க அமர்செய்துப்ர தாபிக்கும்
அதிகவித சாமர்த்ய கவிராஜ ராஜனே
அழுதுலகை வாழ்வித்த கவுணிய குலாதித்த
அரிய கதிர் காமத்தி லுரியாபி ராமனே

7

சரத்தே யுதித்தா யுரத்தே குதித்தே
சமர்த்தா எதிர்த்தே வருசூரைச்
சரிப்போன மட்டே விடுத்தா யடுத்தாய்
தகர்த்தா யுடற்று ணிருகூறுச்
சிரத்தோ டுரத்தோ டறுத்தே குவித்தாய்
செகுத்தாய் பலத்தார் விருதாகச்
சிறைச்சேவல் பெற்றாய் வலக்கார முற்றாய்
திருத்தா மரைத்தாள் அருள்வாயே
புரத்தார் வரத்தார் சரச்சே கரத்தார்
பொரத்தா னெதிர்த்தே வருபோது
பொறுத்தார் பரித்தார் சிரித்தா ரெரித்தார்
பொரித்தார் நுதற்பார் வையிலேயின்
கரித்தோ லுரித்தார் விரித்தார் தரித்தார்
கருத்தார் மருத்தூர் மதனுரைக்
கரிக்கோல மிட்டார் கணுக்கான முத்தே
கதிர்காம முற்றூர் முருகோனே!

8

சரியை யாளர்க்குமக் கிரியை யாளர்க்குநற்
சகலயோ கர்க்குமெட் டரிதாய
சமயபே தத்தினுக் கணுகொணு மெய்ப்பொருட்
டருபரா சத்தியிற் பரமான
துரியமே லற்புதப் பரமஞானத் தனிச்
சுடர்வியா பித்தநற் பதிநீடு
துகளில் சாயுச்சியக் கதியை யீறற்றசொற்
சுகசொ ரூபத்தையுற் றடைவேனோ
புரிசைசூழ் செப்பதிக் குரிய சாமர்த்யசற்
புருஷ வீரத்துவிக் ரமசூரன்
புரள்வேல் தொட்டகைக் குமர மேன்மைதிருப்
புகழை யோதற்கெனக் கருள்வோனே
கரியயூ கத்திரட் பலவின் மீதிற்சுளைக்
கனிகள் பீறிப்புசித் தமராடிக்
கதலிசூ தத்தினிற் பயிலுமீ ழத்தினிற்
கதிர்காமக் கிரிப் பெருமாளே !

9

பாரவித முத்தப்ப டீரபுள கப்பொற்ப
யோதர நெருக்குற்ற இடையாலே
பாகளவு தித்தித்த கீதமொழியிற் புட்ப
பாணவிழியிற் பொத்தி விடுமாதர்
காரணி குழற்கற்றை மேல்மகர மொப்பித்த
காதில்முக வட்டத்தி லதிமோக
காமுகன கப்பட்ட வாசையை மறப்பித்த
கால்களை மறக்கைக்கும் வருமோதான்

தேரிரவி புட்கிப்பு காமுதுபு ரத்திற்றெ
சாசிரனை மர்த்தித்த அரிமாயன்
சீர்மருக அத்யுக்ர யானைபடும் ரத்னத்ரி
கோண சயிலத்துக்ர கதிர்காம
வீரபுன வெற்பிற்க லாபியெயி னச்சிக்கு
மேகலை யிடைக் கொத்தி னிருதாளின்
வேரிமழை யிற்பச்சை வேயிலருணக் கற்றை
வேல்களி லகப்பட்ட பெருமாளே!

10

மருவறு வெற்றி மலர்தொடா விற்கை
வலிசெயா நிற்கு மதனாலும்
மதில்கள்தா வுற்ற கலைபடா வட்ட
மதிசுடா நிற்கு மதனாலும்
இருகணால் முத்த முதிரயா மத்தி
னிரவினால் நித்த மெலியாதே
இடருறு மெத்த மயல்கொளா நிற்கு
மிவளை வாழ் விக்க வரவேணும்
கரிகள் சேர்வெற்பி லரிய வேடிச்சி
கலவிகூர் சித்ர மணிமார்பா
கனக மாணிக்க வடிவனே மிக்க
கதிர காமத்தி லுறைவோனே
முருகனே பத்த ரருகனே முக்தி
முதல்வனே பச்சை மயில்வீரா
முடுகிமே விட்ட கொடியசூர் கெட்டு
முறிய வேல் தொட்ட பெருமாளே!

11

மாதர்வச மாயுற் றுழல்வாரும்
மாதவ மெணுமற் றிரிவாரும்
தீதகல வோதிப் பணியாரும்
தீநரக மீதிற் றிகழ்வாரே
நாதவொளி யேநற் குணசீலா
நாரியிரு வோரைப் புணர்வேலா
சோதிசிவ ஞானக் குமரேசா
தோயில் கதிர்காமப் பெருமாளே!

12

முதிரு மார வார நட்பொ டிலகு மார வார மெற்றி
முனியு மாரவார முற்ற கடலாலே
முடிவி லாத தோர்வ டக்கி லெறியு மால மார்பி டத்து
முழுகி யேறிமே லெறிக்கு நிலவாலே
வெதிரி லாயர் வாயில் வைத்து மார ராக நீடி சைக்கும்
வினைவி டாத தாயருக்கு மழியாதே
வினையு மோக போக முற்றி அளவி லாத காதல் பெற்ற
விகட மாதை நீயணைக்க வரவேணும்
கதிர் காம மாந கர்க்கு ளெதிரி லாத வேல் தரித்த
கடவுளே கலாப சித்ர மயில்வீரா
கயலு லாம் விலோ சனத்தி களப மார்ப யோத ரத்தி
ககனமே வுவா ளொருத்தி மணவாளா
அதிர வீசி யாடும் வெற்றி விடையி லேறு மீசர் கற்க
அரிய ஞான வாசகத்தை அருள்வோனே
அகில லோக மீது சுற்றி அசுரர் லோக நீறெ ழுப்பி
அமரர் லோகம் வாழவைத்த பெருமாளே.

13

வருபவர்க ளோலை கொண்டு நமனுடைய தூத ரென்று
மடிபிடிய தாகநின்று தொடர்போது
மயலது பொலாத வம்பன் விரகுடைய னுகு மென்று
வசைகளுடனே தொடர்ந்து அடைவார்கள்
கருவியத னுலெறிந்து சதைகள் தனையே யரிந்து
கரிய புனலே சொரிந்து விடவேதான்
கழுமுனை யிலேவுயி ரென்று விடுமெனும வேளை கண்டு
கடுகிவர வேணுமெந்தன் முனமேதான்
பாகிரியு லாவு செந்தி மலையினுட னேயிடும்பன்
பழநிதனி லேயிருந்த குமரேசா
பதிகள் பலவா யிரங்கள் மலைகள் வெகுகோடி நின்ற
பதமடியர் காணவந்த கதிர்காமா
அரவுபிறை பூளை தும்பை விலுவமொடு தூர்வை கொன்றை
அணிவர்சடை யாளர் தந்த முருகோனே
அரகர சிவாய சம்பு குருபர குமார நம்பும்
அடியவர்தமை யாளவந்த பெருமாளே

வாழ்த்து.

தய்யதா மறைகளாலும் துதித்திடற் கரியதான
செய்யவே ளடிகள்வாழ்க சேவலும் மயிலும்வாழ்க
வெய்யசூர் மார்புகீண்ட வேற்படை வாழ்கவன்னுன்
பொய்யில்சீ ரடியார்வாழ்க வாழ்கயிப் புவனமெல்லாம்.

முற்றிற்று.